NEWSLETTER.

From COODAL CIC U.K.

Date: 29 November 2024. Issue No:4

**Flood Relief Fund - Coodal**

We express our profound sadness and solidarity with the community for the suffering experienced by our people in the North, East, and Hill Countryside due to the recent floods. Many families have lost their homes, property, and livelihoods, leaving them displaced and in dire need of assistance.

Coodal has responded by donating funds to support the affected areas in the North, providing immediate aid to alleviate hunger and distress among the displaced. In addition, we successfully raised £ 1385, to further extend our contributions.

We are deeply grateful to the following members and supporters for their generous donations toward this worthwhile cause. Your kindness and compassion have made a meaningful difference during this challenging time:

**Donations for flood relief fund, Coodal.**

**Doners are:**

1)Dr R.Gowribalan ------------ £ 500

2) Dr S.Shanmugadasan------------------- £1000.

3)Prof Ariyaratnam ----------- £100

4) Dr K.Nagendran---------------------------£100

5)Dr S.Mahendran ------------£100

6) Anonymous donor------------------------£100

7)Dr Kantha Niranjan---------- £50

8)Dr Jeyarajan ----------------------------------£50

9) Dr K. Gopalakrishnan------ £50

9)Dr P. Kandasamy------------------------- £50

**Contribution from Canadian members and supporters**

10)Dr Ranjith Kumar – 310 CAD, Supporter of Coodal. 11)Dr Mohan------ 100 CAD

12) Chandra ----------- 100 CAD

Total--------------------------£ 2385.

Thank you for supporting those in need. Together, we can help rebuild lives and restore hope.

**********************************************************************

Financial Transactions and Progress Report Coodal CIC 05/12/2024

We have donated 5 lakhs to Ayngaranasan , The Green, NGO, for flood relief in Jaffna.

**Report from Ayngaranasan:**

**வெள்ளநிவாரணம்**

**நொவெம்பர் 2024**

பெங்கால் புயல் காரணமாக ஏற்;பட்ட வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவு, பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைக்கு அமைவாக, கிராமசேவையாளர்களின் வழிகாட்டுதலுடன் எம்மால் இரண்டு தினங்கள் வழங்கப்பட்டுள்ளது.

எமக்குக் கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் ஒழுங்கில் 28.11.2024 அன்று திருநெல்வேலி, நல்லூர் - செட்டியதாழ்வு, காக்கைதீவு, நாவாந்துறை , சோனகதெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 660 பேருக்கு உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டது.

30.11.2024 அன்று திருநெல்வேலி மாரியம்மன் கோவிலடி, தாவடி காளிகோவிலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 385 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

28,30-11-2024 ஆகிய இரண்டு தினங்களிலும் மொத்தமாக 1045 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு தினங்களுக்குமான மொத்த செலவு ரூபா 2,11,354.00 (அரிசி, மரக்கறி வகைகள், சோயாமீற், தேங்காய், உணவைப் பொதி செய்வதற்கான தாள்கள், எடுத்துச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட உரப்பைகள், உணவு விநியோகத்தில் ஈடுபட்ட முச்சக்கரவண்டி கொடுப்பனவு, சமைத்த உணவு பற்றாக்குறை காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட பாண், உணவுப்பொதிகள் உள்ளிட்ட செலவு).

சராசரியாக ஒரு உணவுப் பொதிக்கான செலவு ரூபா 202.00

மரக்கறி வகைகள் யாவும் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில்; ஆடியபாதம் வீதியில் உள்ள N.N பல்பொருள் வாணிபம் என்ற மரக்கறி மொத்த விற்பனை நிலையத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. பருப்பு, சோயாமீற், புளி, மீளகாய்த்தூள், அரிசி போன்ற உலர் உள்ளீடுகள் திருநெல்வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள ழேசவாறயல ளரிநச ஆயசமநவ ல் கொள்வனவு செய்யப்பட்டன.

உணவு சமைப்பதற்கு பிரதான சமையலாளர் ஒருவர் இரண்டு தினங்களுக்கும் சம்பளத்துக்கு அமர்த்தப்பட்டார். உதவியாளராக இரண்டு தினங்களிலும் மரக்கறிகள் வெட்டுதல், உணவைப் பொதி செய்தல், உணவை விநியோகித்தல் போன்ற தேவைகளுக்கு பசுமை இயக்கத்தின் தொண்டர்கள் பணியாற்றினார்கள்.

பெற்றுக்கொண்ட அனுபவங்கள்

1. உணவு விநியோகித்த இரண்டு தினங்களிலும் எங்களால் உணவு விநியோகித்த நேரத்தில், எங்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலானோர் குழுமியிருந்தார்கள். இதனால் இரண்டு தினங்களிலும் உணவுப் பொதிகள் மற்றும் பாண் மேலதிகமாக பொதிகள் கொள்வனவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உணவு விநியோகித்துவரும் ஏனைய அமைப்புகளினதும் பொதுவான அனுபவமாக இது உள்ளது.

2. பொதுவாக கிராமசேவகரின் ஏற்;பாட்டில் பாணே விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது. தொடர்ந்து பாணை உண்பதற்கு விரும்பாமையால் நாம் மேற்பார்வையிடச் சென்ற இடைத்தங்கல் முகாம்களில் பாண் நுகரப்படாமல் மீதமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

பாண் விநியோகிக்கப்பட்ட பின்னர் எவரேனும் பிட்டு போன்ற உணவை எடுத்து வரும்போது பாணை ஒப்படைத்து விட்டுப் பிட்டு பெறுவதற்கு பலர் முரண்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

3. பொது மக்களும் பல இடைத்தங்கல் முகாம்களுக்கு தங்களால் இயன்ற உணவை முன்கூட்டியே எந்த அறிவிப்பும் இல்லாமல் வழங்கி வந்தனர். இதனால் சில இடைத்தங்கல் முகாம்களில் உணவுப்பொதிகளை வேறு இடங்களுக்குத் திருப்பிவிட்டதையும் அவதானிக்க முடிந்தது.

4.;பேரனர்த்தம் ஒன்றின் இடப்பெயர்வின்போது பொதுமக்களின் மனப்பாங்கு இவ்வாறாகவே இருக்கும். ஏற்கனவே பல வருடங்களாக இப் பணியில் ஈடுபட்டு வரும் எங்களுக்கு இவை புதிய அனுபவங்களாகவோ அல்லது மனச்சோர்வைத் தருவனவாகவோ அமையவில்லை.

5. மழை பூரணமாக ஓய்ந்து விட்டதன் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் இருந்து மக்கள் தங்கள் இடங்களுக்கு திரும்பிச் சென்றுகொண்டு இருக்கிறார்கள். இதனையே கிராமசேவகர்களும் ஊக்குவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால், நேற்றைய தினம் இரவு (02.12.2024) மல்லாகம் விசாலாட்;சிப் பாடசாலையில் தங்கியிருந்த மக்கள் தரப்பின் சார்பில் ஒரு ஆசிரியர் என்னிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு தங்கள் கிராமத்தில் இன்னும் வெள்ளம் வடியாது இருப்பதாகவும் பல மலசலகூடங்களில் வெள்ளநீர் நிரம்பியிருப்பதால் உடனடியாகச் சொந்த இடம் திரும்ப முடியாது என்றும் மேலும் சில தினங்கள் அந்தப் பாடசாலையில் தங்கியிருப்பதற்கு அனுமதி பெற்றுத்தருமாறும் கேட்டிருந்தார்.

நான் நேற்று இரவு உடனடியாகவே அரசாங்க அதிபருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இதனைத் தெரிவித்தபோது அவர் என்னுடன் இணைப்பில் இருந்தவாறே மறுமுனையில் தெல்லிப்பளை பிரதேச செயலரை அழைத்து வலுக்கட்டாயமாக இடைத்தங்கல் இடங்களில் இருந்து எவரையும் வெளியேற்ற வேண்டாம் என்று உத்தரவிட்டதோடு, அவர்களுக்கான உணவைத் தாங்களே வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

6. இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருப்போருக்குத் தேவையான அளவு உணவு வழங்கும் ஏற்பாடு உள்ளதால் சமைத்த உணவு வழங்கும் சேவையை நாம் இரண்டு தினங்களோடு நிறுத்திக் கொண்டோம்.

எனினும் மீளவும் தங்கள் வதிவிடங்களுக்குத் திரும்பும் தாழ்நில மக்களுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கும் குடும்பம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ஒருவாரத்துக்குத் தேவையான உலருணவுகள் அடங்கிய பொதிகளை வழங்குவது அவர்களுக்குப் பேருதவியாக அமையும். எங்களால் இதுவரையில் 1800க்கும் மேற்பட்ட இத்தகைய குடும்பங்கள்; அடையாளம் காணப்பட்டுள்ளன. (இந்த எண்ணிக்கை இதுவரையில் எங்களிடம் வேண்டுகோள் விடுத்த குடும்பங்களின் எண்ணிக்கை ஆகும். தேவைப்பாடுடையோர் இதைவிட அதிகமாகவே இருப்பர்.)

அன்றாடங் காய்ச்சிகளான இம் மக்கள் கடந்த பத்து நாட்களுக்கும் மேலாகத் தங்கள் கூலித் தொழில் வாய்ப்பை இழந்துள்ளதால் அவர்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்குவது சிறந்த நிவாரணமாக அமையும் என்பது எமது உறுதியான அபிப்பிராயமாகும்.

பெங்கால் புயலுக்கு பின்னரான பாதிப்புக்கள்: ஐங்கரநேசன் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் - தமிழ்வின் https://
பெங்கால் புயலுக்கு பின்னரான பாதிப்புக்கள்: ஐங்கரநேசன் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் - தமிழ்வின்
https://tamilwin.com/article/po-iyngaraneshan-reported-about-pengal-storm-1733061377

For comments, please contact Shan at sella.dasan@gmail.com